உளி - 8 | ஓசை - 2 | ஜூலை - 2024 | திங்களிதழ்

# படைப்பு



## கல்வெட்டு

கவிதை மின்னிதழ்

www.padaippu.com

அரசு பதிவு எண்: 521/2018

**நிறுவனர் & ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**இதழ் உருவாக்க உதவி:**
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

**வடிவமைப்பு:**
ஆர்.பிரகாஷ்

**இணையதள முகவரி:**
padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| நரேன் | 04 |
| நிலவை பார்த்திபன் | 04 |
| அன்பு மணிவேல் | 04 |
| ம.சக்திவேலாயுதம் | 05 |
| பரமேஸ்வரி சண்முகம் | 06 |
| வணவை தூரிகா | 06 |
| பாபு | 06 |
| தங்கேஸ் | 07 |
| சே கார்கவி கார்த்திக் | 08 |
| மகேஷ் சிபி | 08 |
| நயினார் | 09 |
| முகமது பாட்சா | 09 |
| சீனி வாசன் | 10 |
| மணி அமரன் | 10 |
| லக்ஷ்மி சதீஷ்குமார் | 10 |
| வினிதா மோகன் | 11 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | 11 |
| சுப்பையா கந்தையா | 12 |
| பாத்திமா சுமையா | 13 |
| மு. கவிதா | 13 |
| சு.கேசவன் | 13 |
| அருணா சிதம்பரம் அமுதா | 14 |
| ஜெகன் மோகன் | 14 |
| ஸ்ரீவாரி மஞ்சு | 15 |
| மணவை லைவின் | 16 |
| பாக்யபாரதி | 17 |
| பூங்கோதை கனகராஜன் | 17 |
| மா. காளிதாஸ் | 18 |
| கோ. பாரதிமோகன் | 19 |
| ச.ஆனந்தகுமார் | 20 |
| கௌ ஆனந்தபிரபு | 20 |
| தங்கராஜ் பழநி | 21 |
| அன்பழகன்ஜி | 22 |
| தா.பிரபுபாரதி | 22 |
| மு.முபாரக் | 22 |
| தி.கலையரசி | 23 |
| தமிழ்க்கீரன் | 23 |
| கதிரவன் வீ | 23 |
| பிரபுசங்கர் க | 24 |
| க. அய்யப்பன் | 25 |
| அ.ஈடித் ரேனா | 26 |
| சாய் மீரா | 27 |
| ச. இராஜ்குமார் | 27 |
| ராம் | 27 |
| மெஹராஜ்பேகம் | 28 |
| மீ. யூசுப் ஜாகிர் | 28 |
| செ.வீரமணி | 28 |
| நடராஜன் பெருமாள் | 29 |
| வீரசோழன்.க.சோ. திருமாவளவன் | 30 |
| கோ.லீலா | 31 |
| கார்த்திக் செல்வராஜ் | 32 |
| சு.கேசவன் | 32 |
| த. ரவீந்திரன் | 32 |
| ஷப்ரா இல்முத்தீன் | 33 |
| கா.ந.கல்யாணசுந்தரம் | 34 |
| ஜெகன் மோகன் | 34 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | 35 |
| சிவசந்திரன் | 35 |
| பெரணமல்லூர் சேகரன் | 35 |
| கயல் | 36 |
| காயத்ரி ராஜசேகர் | 36 |
| குளோரிசக்தி | 37 |
| கி.கவியரசன் | 37 |
| யாழ் எஸ் ராகவன் | 38 |
| ரிஸ்வான் | 39 |
| ஆத்மாஜீவ் | 39 |



நதி கேன்களில்!
மணல்
லாரிகளில்!
மரங்கள்
டிரக்குகளில்!

நரேன்

என் கழுத்தை நெரிப்பதாக
எண்ணிக்கொண்டு
என் கால் பிடித்துக் கிடக்கின்றன
சில கவலைகள்
நான் தலைகீழாக நிற்பதை
தயவுசெய்து சொல்லிவிடாதீர்கள்
அவைகளிடம்!

நிலவை பார்த்திபன்

ஒன்னுமண்ணாத்தான்
ஆடிப்பாடி வளந்தோம்
நானும்
என் ஆட்டுக்குட்டி அலமேலுவும்.

வெளையாட்டும்
வெள்ளந்திச் சிரிப்புமாத்
திரிஞ்ச எங்க மேல
யாரு கண்ணு பட்டுச்சோ...

பருவத்துக்கு வந்ததும்
அலமேலுக் குட்டிய
கொலசாமிக்கும்...
என்னைய குடிகாரனுக்குமா
பலியாக்கிச்சு வீடு.

அலமேலுவோடயே
அறுந்து போச்சு என் உசிரு.

இப்போ
குடிகாரனுக்குப் பொங்கிப் போட்டுக்கிட்டு
சிவத்தைத் தேடியலையுது...
என் சவம்.

அன்பு மணிவேல்



அவ்வப்போது மனசை
தூசி தட்டிக்கொள்ளும் நான்
இப்போதெல்லாம்
தூசி தட்டுவதே இல்லை...
அதனாலே மனம் நிறைய
ஒட்டடை பரவியிருக்கிறது...

சில எட்டுக்கால் பூச்சிகள்
அதில் வாழ்ந்துகொண்டிருகிறது...
சிலந்தி வலையொன்று
பின்னப்பட்டிருக்கிறது...

ஒட்டடைக் கம்பை
நான் எடுத்ததும்
மனசு பயந்தபடி
பவ்வியமாக என்னை அடித்துவிடாதே
என்பது போல்
ஒரு பாவலா காட்டியது...

அடித்தேன் ஒட்டடையை
எட்டுக்கால் பூச்சிகள் பறந்தன...
சிலந்திவலை சிதைந்தது...
அப்போதும் கூட
மனசை அடிக்க
மனம் வரவில்லை...

இனி அடிக்கடி
தட்ட முடிவெடுத்தேன்...
தூசி விழுந்தாலும் சரி...
மனசு விழுந்தாலும் சரி!

**ம.சக்திவேலாயுதம்**



## மாடப்புறாக்கள்

கட்டிட மரங்களில்
தஞ்சம் புகும்
மாடப் புறாக்களுக்கு
சன்னல்களே கிளைகளாகிப் போகிறது...

பெருநகர வாழ்வு
பழகி விடுகிறது அதற்கும்...

புறச் சத்தங்களைக்
கடக்கத் தெரிந்திருக்கிறது அதற்கு...

அதன் அடித் தொண்டையிலிருந்து வரும்...
'ம்க்கும் ம்க்கும்' என்ற
அகச் சத்தம் தான்...

இங்கிருந்த என் மரம் எங்கே...
எங்கே வெனக் கேட்டது போல்
நம் மனதைக் குடைகிறது.

பரமேஸ்வரிசண்முகம்

எல்லாம்
வடியும் வரை
வேறு வேறு வேலைகளில்
மூழ்கிக் கொண்டிருந்து விட்டு

கடைசியில்...

ஓரிரு கவிதையேனும்
கிடைத்து விடாதா என
பதட்டத்துடன் தேடுகிறது மனது...!!

வணவை தூரிகா

சித்தாள் என்றார்கள்
எல்லோரும்
அவளை

அவர்களுக்கு
என்ன தெரியும்?

குடும்ப பாரத்தையே
தன் தலையில்
சுமக்கும் அவள்
பெரியாள்தான் என்பது

பாபு



பிரிவென்னும் கலை
சில கண்ணீர் துளிகளால்
நேர்த்தி செய்யப்பட்டதென்று
நீ நினைப்பது
சிறகிலிருந்து அகாலத்தில் உதிர்ந்த
இறகொன்று
தான் இன்னமும் பறவையின் உடல் தான்
என்று நினைப்பதைப் போல
அத்தனை அபத்தமானது

கிளைகளை விரித்துப் பரவும்
விருட்சங்கள் வேண்டுமென்று
திட்டமிட்டு கரங்களை
விரிப்பதில்லை

தன் உள்ளங்கைகளில்
வானம் தேங்கியிருக்கும் வேளைகளில்
இலைகள் பஞ்ச பூதங்களின்
அரசர்களென்று
மார்தட்டிக் கொள்வதில்லை

சொல்ல முடியாத துக்கத்தை
சுமந்தலையும் பறவை கூட்டங்கள் தான்
ஆற்றாமையில் தாளாது
படபடவென்று
சிறகடிக்கின்றன

ஒரு நதி சுழலுக்குள்
தலை கிறங்கி
செத்துக் கொண்டிருக்கிறது

மீன் கொத்தியின் அலகில்
உயிருக்கு
போராடும் மீன்
தலையையும் வாலையும் அசைத்து
துடி துடிக்க

காலம் சிறிதும் கருணையின்றி
மீன் கொத்தியின் அலகிற்கு
முத்தமிட்டு உச்சி முகர்ந்து கொண்டிருக்கிறது

**தங்கேஸ்**



மழை போர்த்திய குடை
ஒரு காளானாக உருபெறுகிறது
துளிகள் குழந்தையாய் தவழத்தொடங்கின

நிறம் போர்த்திய வானம்
துளிகளாய் கரைவதற்குள்
மொத்த வண்ணத்தையும் விழுங்கித் தீர்த்தன
ஆ வென பசிப் போர்த்திய
நீர் நிலைகள்

நீந்திக் களிப்பதற்கு
ஒரு துடுப்பு மட்டும் போதுமானது
செதில்கள் இல்லாத
மீன்கள் போர்த்திய எனக்கு

**சே கார்கவி கார்த்திக்**

வாட்ஸ்அப்பில் நீ தட்டச்சிடும்
ஒவ்வொரு சொல்லின் கீழும்
அழுத்திப் பிடித்து சிவப்பு நிறத்திலொரு
ஹார்டின் வைக்கிறேன்

பதிலுக்கு நீயும்
என் சொற்களின் கீழ்
ஹார்டின் விட்டிருக்கிறாய்

சாட்டினை முடித்துவிட்டு
ஒரு முறை நம் உரையாடல் திரையை
மேலும் கீழும் நகர்த்திப் பார்க்கிறேன்
ஒரு கவிதையைப் போலிருக்கிறது
நம் உரையாடல்

கவிதையின் இடையே
நீ என்னை எருமையென்று திட்டியிருந்தாய்
நான் உன்னை
தேவதை எருமையென்று விளித்திருந்தேன்

**மகேஷ் சிபி**



உன் நேரத்தை
நான் தின்றுவிட்டதாக சொல்லாதே
உனக்காக நான் சேகரித்து வைத்திருந்த
என் தூக்கத்தின் மிச்சமது.

அன்பைப் பற்றி
எனக்கு வகுப்பெடுக்காதே
அதை உனக்கு செலவு செய்ய
என்னை சுற்றியுள்ளவர்களிடம்
நான் சம்பாதித்த பகை அது.

நமக்குள் வந்தது
காதல் இல்லை என்று சொல்லாதே
நாம் புணர்ந்த பார்வையில்
பிறந்த குழந்தை அது.

என்னை மறந்துவிடு என்று
சொல்லாதே
உன்னை நினைப்பதற்கு
எனக்கு நேரமேயில்லை
என்னை கொன்ற மறதி நீ தானே...

நயினார்

சமரசம்
ஆளுக்கொருவராய் கைக் குலுக்கிக்கொள்கிறது
முகமூடிகள் சரியில்லை!
குசலம் விசாரிப்பில்
குளம் குழம்பிக்கிடக்கக் கிடைப்பது
என்ன மீன்களாக இருக்கும்?
கடவுள் கைவிட்டதாகப் புலம்புகிறவன்
இன்னமும்
ஏதோ ஒரு நம்பிக்கையில் நம்பி
அவனிடம் யாசித்துக் கொண்டிருக்கிறான்!
நீங்கள் நலம்தானே?

முகமது பாட்சா



ஊருக்கெலாம் சாவு செய்தி
கொட்டுபவன்
செத்த சேதி
ஊரின் அடுத்த சாவில் தான்
எல்லோருக்கும்
தெரியவந்தது.

**சீனி வாசன்**

தானியங்களை
தன்னில் கொண்ட
கோபுர கலசம் நீ

கோவிலே கதியென கிடக்கும்
மாடப்புறா நான்

பார்த்துப் பார்த்தே
பசியாறிக் கொள்கிறது
என் காதல்

**மணி அமரன்**

சோளக்காட்டு பொம்மை
அதோ ! தவமிருகிறது விடியலில்...
ஒற்றைச் சூரியன் !

அழைப்பதே இல்லை
தினம் வந்து ரசிக்கும் நிலவு...
ஜன்னல் வழிக் கவிதை !

இரவும் பகலும்
அதே அசைவு அதே ஓசை
நெடுஞ்சாலை மரங்களில் !

எத்தனைக் கொடுமை
வாய்ப்பே இல்லை நிலவை ரசிக்க...
நண்பகல் குயிலுக்கு !

கானல் மறைந்த வீதி
இரவு முழுதும் ஒலிக்கும்...
இலைகளின் சலசலப்பு !

**லக்ஷ்மி சதீஷ்குமார்**



## கண்ணீரின் நிழற்படம்

வணிகத்தில் வளர்ந்து வாகை சூடிவிட்ட
வெற்றிகளிப்பில் திளைத்திருக்கும் நிழற்படம்
உலர்வதற்குள்...
அன்பென்னும் புயல் அரியணை யேறி
களிறு சூறையாடிய கழனியைப் போல
வேரோடும் மண்ணோடும் வேரறுக்கும் நிழற்படம்.

கண்களில் கனவுகள் அறைகூவலிட்டு அழைக்க
வண்ணத்தூரிகை மயிலாடும்
நிழற்படம் உலர்வதற்குள்...
முகத்தில் இயலாமையின் மை காரெழுதுகருவியில்
தீட்டிய வண்ணமில்லா ஓவியம் போல
மீள்பார்வையூட்டி கருமையாகிப் படர்ந்திடும் நிழற்படம்.

வேதனைகளையும் வருத்தங்களையும்
சொல்ல வழியின்றி
மை கொண்டு படைத்திட்ட நிழற்படம் உலர்வதற்குள்...
முடிவற்ற கனவுகளை உறையிலிட்டு மூடிவிட்டு
கண்ணுக்கு மைத்தீட்டும் கண்ணீரின் நிழற்படம்.

**வினிதா மோகன்**

ஒரு விதை
ஒரு செடி
ஒரு இலை
ஒரு கிளை
ஒரு அரும்பு
ஒரு மொட்டு
ஒரு பூ
ஒரு காய்
ஒரு கனி
மீண்டும் ஒரு விதை

அத்தனையிலும்
நான் இருக்கிறேனென்று
நீ சொல்லிக்கொள்வதில்லை.
இத்தனையிலும்
நீ இல்லையென்று
நான் நம்புவதுமில்லை.

**கா.ரஹ்மத்துல்லாஹ்**



## பிரியம்

என் கனாக்களனைத்தையும்
குத்தகைக்கு எடுத்து
அவை எல்லாவற்றிலும் நீ
தாவளம் ஏற்படுத்தித் தங்குவதால்
என்னில்
தவிர்க்க முடியாதவளாக இருக்கின்றாய்

தட்டளிவு செய்யும் நட்டுவநரின்றி
உன் காதோரத்தில் காற்றிலாடுகின்றன
பிசிறென எழும்பி நிற்கின்ற
தனித்தனி ஒற்றைத் தலை மயிர்கள்.

எந்தத் தாள நடைக்கு
ஆடுகின்றன அவையென்று
நான் யோசிக்க முடியாவண்ணம்
உன் கண்கள்
என்னைக் கட்டிப் போட்டிருக்கின்றன

உன்னைப் பார்ப்பதற்கான
என்னுடையப் பிரவேசங்கள்
இளமையின் உந்துதல்களென்றே
உனக்குத் தோன்றக்கூடும்
என் இதயத்திலுள்ள உன் மீதான
அண்ட அளவு நேசம் தெரியாதவரை

கண்ணிமையின் வேலையென்பது
வெளிப்பொருட்கள் உள் வராவண்ணம்
தடுப்பது என்றே புரியப்பட்டு வருவதால்
அடிக்கடி இமைத்து
விழியின் மேற்பரப்பை
ஈரமாக வைத்துக்கொண்டிருக்கும்
அதனது பிரதான வேலை
வெளியேத்தெரியாமல் போய்விடுகின்றது

சுப்பையா கந்தையா



எடுத்த எடுப்பில் எல்லாம் மறந்து
வெகுதூரம் சென்று விட முடியாது

எங்கேயோ பிறந்து இருப்போம்
எப்படியோ வளர்ந்து இருப்போம்

எத்தனை இன்பம் கண்டிருப்போம்
எத்தனை துன்பம் கடந்திருப்போம்

எதையோ நாம் நினைத்திருப்போம்
எதையோ நாம் அடைந்திருப்போம்

ஏதோ ஒன்றில் நிலைத்திருப்போம்
ஏதோ ஓரிடத்தில் பிழைத்திருப்போம்

விரும்பிய ஒன்றை சுகித்திருப்போம்
விரும்பாத ஒன்றை சகித்திருப்போம்

எத்தனை முகங்கள் கண்டிருப்போம்
எத்தனை மாயங்கள் கற்றிருப்போம்

அத்தனை எளிதில் எல்லாம்
மறந்திடலாமா?
பின் தொடரும் நினைவுகளை
யாரும் தடுத்திடலாமா?

**பாத்திமா சுமையா**

கொதித்து குளிரும்
பகல் நிலவு நான்

குளிர்ந்து கொதிக்கும்
இரவுச் சூரியன் நீ...

சிந்தனையை
மாற்றென்கிறாயே
சூரியனிடம் கடன் வாங்கி
ஒளிரும் நிலவு போல
என் சிந்தனையின்
ஆதிமூலமே நீதானடா...

**மு. கவிதா**

பெற்ற தாய்
அக்கறையுடன் கவனிக்கும் மகன்
அம்மா பெயரில் சொத்துக்கள்!

**சு.கேசவன்**



வசமாய் அமைந்த வார்த்தைகள்
ஒரு கருவைச் சுற்றி
வாகாய்க் கோர்த்துக் கொண்டன...

வீசாத மென்காற்றில் உயர்ந்தெழுந்த
துப்பட்டாவைப் போல...
அதுவரையில் தரைப்பார்த்து அமர்ந்திருந்த
அவள் விழிமடல்கள் மெல்லென விரிந்தன...!

பூமிக்கு நோகாமல் முன்பாதம் அழுந்த
நுனிவிரல்கள் மட்டும் மெதுவாகத் தாளமிட்டன...!
உடல் தளர... இடை அசைந்து இழைந்து
எழுந்ததோர் அழகு நர்த்தனம்!

சிந்தையால் நோக்கி மனதால் இரசிக்க
இன்னிசையாய் தவழ்ந்து மிதப்பது இதம்!
தாயின் விரல்பிடித்து கோயிலுக்குச் செல்லும்
பூச்சூடிய சிறுமி போல...
நடையோர் பரவசம்!

இதைத்தானே எல்லோரும்
கவிதை என்கிறீர்கள்...!

அருணா சிதம்பரம் அமுதா

ஒரு மௌனப் புரட்சி வெடிப்பதற்கு
முன் தோன்றும்
ஒரு அனாதி அமைதியில்
அவள் விரல்கள் வீணை நரம்புகளாய்
இசை மீட்ட ஆயத்தமாய் நீர்ப் பரப்பின் மேல்
ஒரு தியானம்...

விரல்களின் ஈர்ப்பு விசையால்
ஓடிக்கொண்டிருந்த ஆறு கடலாகவும்
கடலோ கண்டங்களை இணைக்கும்
பேராழியாகவும் மாறி
பிரபஞ்ச நடனம் காட்டும்
பேரழகின் மெய் சிலிர்க்கும் தருணம்...

அசைவன எல்லாம் அசையாமல் நின்று
கண் மூடி உள்ளார்ந்த பயணமாயொரு
ஆன்மத் தேடலில் உலகம் தன்னை மீண்டும்
புதுப்பித்துக் கொள்ளும் அதிசயம்...

ஜெகன் மோகன்



புறாவின் சிறகுகளைப் பொதித்து
விண்ணில் பறக்கிறது
சில பறவைகள்...

சுமைகளை ஏற்றுக் கொண்டும்
ஏற்றிக்கொண்டும்
கோவேறு கழுதையாய் தள்ளாடுகிறது
கணிணியில்
சில பறவைகள்...

இதழ்களை இழுத்து மூடினாலும்
மூடாமல் பிரிந்து
புன்னகைக்குள் தன்னை
இருத்தி வைத்திருக்கிறது
சில பறவைகள்...

எட்டு கெஜ சேலையிலிருந்த
கூண்டுப்பறவைகள்
சுடிதாரும்... ஜீன்ஸ்ஸுக்குள் நுழைந்து
கூண்டை உடைத்து விட்டு
பறக்கிறதென நோக்கும்
ஊணக் கண்களறியுமா?

அடுக்களைக்கு ஐந்து வயதையும்...
அண்ணனுக்கு விட்டுக்கொடுக்க
பதின்ம வயதையும்...
விருப்பமில்லா பாடத்தையே
விருப்பமாக்கிய பள்ளி வயதையும்...
கல்யாண சந்தையில் விலைபோக
கல்லூரிக்கு கடிவாளம் கட்டி
நொண்டி குதிரையாய்
லாடத்தையும் அடித்து
கனவுகளை நொறுக்கிய வயதையும்...
விரும்ப வைக்கப்பட்ட
மணமாலையை
சுமக்க வைத்து
அவளையே
தொலைக்க வைத்து...

நீருக்கும் நிலத்துக்கும்
பறக்கும் வாத்தாக...
முட்டி முட்டி
இன்னமும் சகதியில் துடிக்கும்
குளத்து மீனாக
கடைக்கோடி பட்டியிலும்
கிராமத்திலும்...

இந்திய வரைபடத்தில்தான் உள்ளது
உற்று நோக்குங்கள்
அந்த
அடைக்கல சிட்டுக்குருவிகளை...

ஸ்ரீவாரி மஞ்சு



பித்தன் ஒரு பழங்கால கட்டிடத்தின் கீழ் அமர்ந்து
அதன் வயதை எண்ணத்தில்
எண்ணிக்கொண்டிருந்தான்

பித்தனை நோக்கி இப்பாழடைந்த கட்டிடத்தில்
என்ன செய்கிறாய் எனக்கேட்டனர்

பித்தன் பதிலாக
இப்பழமைக்குள் இருக்கும்
புதிய உயிர்களின் உற்சாகத்தை
உற்று நோக்குகிறேன்

பழமை புதுமை என்ற வேறுபாடுகள்
உங்கள் கண்களில் வகுத்த
எல்லை கோடுகளின் அளவீடுகளால் உருவானவை

பூமி பழமையென்பதால்
உங்கள் வீடுகளை இடம்பெயர்த்து விடுவீர்களா

பராமரிக்க படாதவைகளே பழமையாகிவிடுகிறது
பராமரிக்காதது யார் குற்றம்

உடல் நோய்தீர்க்க மருத்துவரை அணுகாத
மனிதஉலகு உண்டெனில்
அங்கே இருக்கும் பழமையை நான் ஏற்கிறேன்

புதியாய் கூடுகட்டிய பறவையின் இறகு
அவன் பாதங்களை தொட்டு வாழ்வின் சுவடுளை
சொல்லிச்சென்றது

கல்லுக்கும் ஈரம் உண்டு என்ற ஒலி
பழமையின் சுவர்களிலிருந்து எதிரொலித்தது

கல்சுமந்த அந்த கட்டிடக்காரனின் வியர்வை
கண்ணீராய் வழிந்து கொண்டிருந்தது

மணவை லைவின்



எத்தனையோ சதிகளை
முறியடித்திருக்கிறேன்...

எத்தனையோ பாரங்களை
சுமந்திருக்கிறேன்...

எத்தனையோ துரோகங்களை
தாங்கியிருக்கிறேன்...

இறுதியில் எல்லாவற்றிலும்
வெற்றியைத்தான்
கொண்டாடியிருக்கிறேன்...

ஆனால்
உன்னை மறக்க
முயற்சிப்பதில் மட்டும்
ஏனோ
தோற்றுக்கொண்டே இருக்கிறேன்...!

**பாக்யபாரதி**

வாசிக்க வேண்டுமெனும்
தீரா முனைப்பில்
காராகிருஹமாய்
அமைதி காத்ததென் விரல் நுனி

எப்படியிருப்பினும்
இயலாது போயென் எழுத்துகள்
புதிதாகப் பிறந்த குட்டிகள்
பாலருந்த ஒரே நேரத்தில்
தாய் ஆட்டை முட்டுவதாகி
வார்த்தைகள் ஓடி வந்து
மோதிக் கொள்ள

வரிசையில் நிற்க வைக்கும்
வாத்தியாராகி முன் பின் மாறி
எதுகை மோனை கட்டி
எழுத்துகளை வரிகளாக்கிட
அடங்கிய பிள்ளைகளே
கவிதையாகின்றன

**பூங்கோதை கனகராஜன்**



தராசின் வடிவங்கள் மாறிய பிறகு
எடைக்கற்கள் பேரிச்சம் பழங்களாகி
செரிமானமும் ஆகிவிட்டன.

ஆனால் அந்த இனிப்பு
இன்னமும் அப்படியே தான் இருக்கிறது.

காலச் சக்கரத்தில் குத்தி
காற்றை வெளியேற்றிவிட்டது
ஓரிடத்தில் தன்னை நிலைநிறுத்தத்
துடித்த அந்த ஒற்றை முள்.

பஜ்ஜியும் வடையும் எண்ணெயில்
பொரித்தெடுக்கப்படும் அந்தச்சட்டியை
எங்கோ பார்த்த நினைவிருக்கிறதா?

ஆம், அதே தான்...
எதையெதையோ எவ்வளவோ உள்வாங்கிய
நெழிசல் எடுக்கப்பட்ட தராசுத்தட்டுகளே.

எடைக்கு அதிகமாகப் போடும்
கொசுறில் நிலைத்திருந்த
கண்களைப் பார்வைக் குறைபாடாக்கியவன்
படாத பாடுபடுகிறான் கடனடைக்க.

கண்கட்டை அவிழ்க்கவும்
இடதுகையைத் தொங்கப் போடவும்
அனுமதி வேண்டிப் போட்ட மனு
விசாரணைக்கு வரும் நாளை
எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்
நீதி தேவதை.

மா. காளிதாஸ்



## கஸல்

இரங்காதவன்தான் நான்
ஒருபோதும் பிடிவாதத்திற்கு
அவளின் கண்களிடம்தான்
ஆயிற்று இப்படி

முள்ளை முள்ளால் எடுப்பது
பழைய விதி
கண்களால் தைத்தவள்
அவற்றை இதழ்களால் எடுத்தும் விட்டாள்

இதயத்தில் அமர்ந்திருப்பதை விட
உண்டா உலகில் ஓர் உயரமான இடம்
நானிருந்தேன் அந்த பீடத்தில்

ஏறுபவர்கள் ஒருவேளை இறங்கிவிடுவர்
அல்லது இறக்கியும் விடப்படுவர்
நானோ தள்ளிவிடப்பட்டவன்

புல்லாங்குழலுக்கு ஆசைப்பட்டு
துளையிடப்பட்ட துயரம் என்னுடையது

விதியின் கரங்களுக்கு
இத்தனைக் கனிவா என்பொருட்டு
கருணை விரல்களை ஒற்றியெடுக்கிறது
என் துளைகளில்

பரிதாபத்திற்கான ஆறுதலாக
உச்சுக் கொட்டுவோரே
தோற்றமும் சுகத்திற்காகவேனும்
பாருங்களேன் ஒருமுறை காதலித்து

கண்ணீர்ச் சகதியில் சொற்கள் பதிய
புலம்பமட்டுமே ஆளான மொழியில்
கையறு நிலையில் உங்களுக்காக
நான் கஸலிசைக்கிறேன்

கோ. பாரதிமோகன்



கண்கள் அகல விரித்து
நிற்காமல் கைகள் ஆட்டி
இடைஇடையே எச்சில் முழுங்கி
யோசிப்பதாய் பாவனை செய்து
பள்ளி விளையாட்டு போட்டிகளில்
நண்பர்களுக்கு விட்டு கொடுத்து
தோற்றுப்போனதாக விவரிக்கும்
அம்முக்குட்டியின் கதைகளை
எத்தனை முறை கேட்டாலும்
அலுப்பதேதேயில்லை...

**ச.ஆனந்தகுமார்**

எந்த நகைச்சுவை சொன்னாலும்
எத்தனை முறை சொன்னாலும்
விழுந்து விழுந்து சிரிப்பான்.
அவன் சிரிப்பைப் பார்த்து
எனக்கும் சிரிப்பு வரும்.

அப்படியொருமுறை
நைந்து போன
நகைச்சுவையொன்றைக் கேட்டு
கண்ணில் நீர்வர சிரித்தான்.
பலமுறை கேட்ட நகைச்சுவைக்கு
எப்படி சிரிக்கிறாயென்றேன்.

கூர்ந்து கண்களைப்பார்த்து
சில நிமிடங்களுக்குப்பிறகு
அழுகைக்கு நிறைய
நினைவுகளிருக்கிறது
சிரிப்புக்குத்தான் காரணம்
வேண்டியிருக்கிறது என்றவன்
மீண்டும் சிரித்தான்.
எனக்கு அழுகை வந்தது.

**கௌ ஆனந்தபிரபு**



## ஒரு மன்னிப்பு என்ன செய்து விடும்?

ஒரு மன்னிப்பால்
நாமிருவரும் சமாதானமாகியிருக்கலாம்...

ஒரு மன்னிப்பால்
நீ என்னுடனே இருந்திருப்பாய்...

ஒரு மன்னிப்பு
நம் பிரிவைத் தடுத்திருக்கலாம்...

ஒரு மன்னிப்பு
என்னை இந்தளவு பலவீனப்படுத்தியிருக்காது...

ஒரு மன்னிப்பு
எனக்குள் பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்க கூடும்...

ஒரு மன்னிப்பால்
பாரமான இந்த நினைவுகளைச்
சுமந்து திரிய வேண்டிய
அவசியமிருந்திருக்காது...

ஒரு மன்னிப்பால்
நம் ஃபேக் ஐடிகள் கருவிலேயே கலைந்திருக்கும்...

ஒரு மன்னிப்பால்
என் பெயரெழுதிய அரிசி உன்னிடமும்
உன் பெயரெழுதிய அரிசி
என்னிடமும் இருந்திருக்கும்...

ஒரு மன்னிப்பால்
நமக்கிடையே
எல்லாம் சரியாகியிருக்கக்கூடும்...

ஆனாலும் என்ன செய்வது
அந்த ஒரேயொரு மன்னிப்பு...
கோரமுடியாதவாறு
என் ஆன்மாவிற்குள் அல்லவா
புதைந்துகிடக்கிறது...!

தங்கராஜ் பழநி



எலியை துரத்துகிறது
புத்தர் வீட்டில் வளர்ந்துவரும்
பூனைக்குட்டி.

அன்பழகன்ஜி

குண்டு துளைத்த கண்ணாடி
காண்பதற்கு அழகாய்
வெளிப்புறக் காட்சி.

தா.பிரபுபாரதி

எந்த உதவியென்றாலும்
தயங்காமல் கேளுங்கள்
எப்போதுவென்றாலும்
அழையுங்கள்,
உங்க உறவாய் நினைத்துக்கொள்ளுங்களென
சொல்லும்
ஒவ்வொரு மனிதரும்
இதுவரை எடுத்ததில்லை...
எந்த அலைபேசி அழைப்புகளையும்!

மு.முபாரக்




குழந்தைக்கு
முலைப்பாலை மறக்கடிக்கும்போது
தாய்மையுடன் போராடும்
அன்னை
பூசிக்கொள்ளும் மூசாம்பரத்தின்
கசப்புச் சுவையை
எனக்களித்துவிட்டுத் தவிக்கிறாய்
இப்போது
அந்த அன்பிற்கு மாற்றாக
தாயின் துகிலைப் பிடித்து உறங்கும்
சேயைப் போல்
உன் நினைவின் ஸ்பரிசத்தைப்
பற்றிக் கொள்கிறேன்
கசப்புக்கும் இனிப்புக்கும்
வேறுபாடு தெரியாத
சுவை பிறழ்வு கொண்டது தானே
காதல்.

**தி.கலையரசி**

## சிறை

அம்மா
அடுக்களை வசம்
அப்பா
மதுக்கடை வசம்
பிள்ளை
மொபைல்கடை வசம்
விலங்கிடப்படாத
சிறையில் குடும்பம்.

**தமிழ்க்கீரன்**

இலை தெரிகிறதா
கனி தெரிகிறதா
அம்பெய்ய தயாராக இருப்பவனிடம்
குரு கேட்டார்
காலடியில் கிடக்கும்
கட்டை விரல் தெரிவதை
அவன் சொல்ல வில்லை

**கதிரவன் வீ**



முனீஸ்வரனுக்கு படையலிட்டு
சம்மதம் கேட்கையில்
ஒரே நேரத்தில் இருவருக்கு
அருள் வந்து விடுகிறது
பம்பை சத்தத்தில்
இருவரும் வெவ்வேறு விதமாக
நடனமாட எந்த தெய்வத்திடம்
முதலில் பேசுவதென
குழம்பிய பம்பைக்காரர்
எப்போதும் லேடிஸ் பர்ஸ்ட்
என்ற அடிப்படையில்
சரோஜா அக்காவிடம்
வந்திருக்கிறது யாரென வினவ
கண்களை உருட்டி படி
“நான் அங்காள பரமேஸ்வரி டா”
என்ற அக்கா
கற்பூரத்தை விழுங்கி
நல்லசாமியாக உடனே சாந்தமாகிவிட்டது

அடுத்ததாக நரை முடியுடன்
உடல் முறுக்கி வினோதமாக
அசைந்து கொண்டிருந்த
பெரியப்பாவிடம் கேட்க
“நான் முனீஸ்வரன் டா
லேட்டா பூஜை போட்டதால
எனக்கு கோபம் டா”
ஆங்கிரி பேர்டாக
ஆங்கிலம் கலந்து ஆவேசமாக
சில பல கெஞ்சல்களுக்கு பிறகு
சம்மதம் தந்து மலையேறினார்
இத்தனை களேபரங்களுக்கிடையே
கோயில் பின்வாசலில்
ஜரூராக நடந்துக்கொண்டிருக்கிறது
சாராய பிரயோகம்...

**பிரபுசங்கர் க**



உனக்கென்ன
எங்கிருந்தோ ஏவுகிறாய்
வலிக்க வலிக்க
பூக்களை எறிந்து
விட்டுப்போகிறது
உன் நினைவு.

முதல் துளி மழை
மறு துளி கண்ணீர்
அதனாலென்ன
தித்திப்பும் உவர்ப்புமாக
தொடர்கிறது காதல்.

எப்போதென்று தெரியாது
எப்படியும் வருமென்று
நிச்சயம் தெரியும்
மரணத்தை போன்று
ஒரு கவிதை!

உன் கனவுக்கு
எத்தனை வீரியம்
நடுநிசியை தூக்கி
கண்ணில் கிடத்திவிட்டு
காணாமல் போகிறது.

இந்த தோல்வி
எழுத்துக்களை வாசித்துவிட்டு
யாரும் அவசரப்பட்டு
அனுதாபங்களை
தந்துவிட வேண்டாம்
ஒரு வெற்றியின்
கரம் பிடித்து தான்
இதை எழுதுகிறேன்.

யாருமறியா வண்ணம்
உன் கனவு
என் மரணத்தை
தள்ளிப்போடுகிறது

க. அய்யப்பன்



ருசியைத் தேடி அலையும்
நாவுகளின் கண்களில் படுவதே இல்லை
பசித்த வயிறுகளின் மேல்
படர்ந்து இருக்கும் அமிலம்

விதிமீறல்களையே
விதிகளாக்கியபின்
அநியாயங்களுக்கு
சாமரம் வீச வேண்டிய கட்டாயத்தில்
நியாயங்கள்

பத்தும் செய்யும்
பணத்தை சம்பாதிக்க
பத்தாயிரம் தவறுகள்

தெளிய விரும்பாமல்
அமிழ்ந்து கொண்டே இருக்கிறோம்
விதவிதமான போதைகள்

வேலியை மேயத்
துணிந்துவிட்ட பயிர்கள்
பதற வைக்கும் பாலியல் வக்கிரங்கள்

இருக்கும் உறவுகளைத் தொலைத்துவிட்டு
இல்லாத உறவுகளை
இணையத்தில் தேடியலைகிறோம்

நோக்கும் திசையெல்லாம்
மலிந்து கிடக்கும் குற்றங்கள்
மனிதம் மரத்த மனிதர்கள்

ரௌத்திரம் கொள்ளவும்
மோதி மிதித்து விடவும் தான்
பாரதிகள்
யாருமில்லை.

அ.ஈடித் ரேனா



எல்லா கனவுகளின் முடிவிலும்
அவள் என்னிடத்தே
வந்து சேர்ந்து விடுகிறாள்
நனவுகளிலன்றி

பெயர் தெரியாத மலர்களையெல்லாம்
நேசிக்கிறேன் நான்
மனிதரல்லாத மனிதர்களையுங்கூட

குருவிக்கும்
என் தோட்டத்துத் தொட்டிச்செடிகளும்
கடத்திவிட முடிகிறது
என் நேசத்தை
அவள் மட்டும் தூரமாய்

என்றேனும் ஒரு நாள்
நிச்சயம் மலர்ந்து விடும்
என்கிற நம்பிக்கையில்
நான் நட்டு வைத்த பிரம்ம கமலத்தின் மீதும்
அதிக நம்பிக்கை இருக்கிறது
அவள் வந்துவிடுவாள்

**சாய் மீரா**

மந்தையில் இருந்து பிரிந்த ஆடு
வந்து சேர்ந்தது
கசாப்பு கடைக்கு...!!

**ச. இராஜ்குமார்**

அவ்வப்போது பெய்யும்
சிறு மழைத்துளி போல்
எனது அன்பின் சாரலில்
அகம் மகிழ்ந்து இதழோரம்
உன்னில் பூக்கும் புன்னகைதான்
எனக்கான வாழ்வியல்...

**ராம்**



மௌனக்கடலின் பெயரில்
ஒரு அழகிய புகைப்படத்திற்கு பின்னால்
திணறிக்கொண்டிருந்த
நேர்த்தியற்ற முகத்தில்
அனுபவ ரேகைகள்
அழகாய் பதிந்திருக்கும்
நீங்கள் அதைத்தான்
தேடித்தேடி பில்டர் வைத்து
அழித்துக் கொண்டிருக்கிறீர்கள்
தடயம் இன்றி

**மெஹராஜ்பேகம்**

தேவைக்கு அதிகமாக
கிடைக்கும் எதுவும்
வீண் தான்...
உன்னிடம் எந்த மாற்றத்தையும்
ஏற்படுத்தாத என்
அன்பை போல...!!!

**மீ. யூசுப் ஜாகிர்**

ஒரு இசையில்
கிறங்க இயலாத போது
சித்திரம் தீட்டுங்கள்

ஒரு வாசிப்பில்
லயிக்க முடியாத தினத்தில்
கவிதை எழுதுங்கள்

ஒரு விடியலை ரசிக்க வாய்க்காத
தருணங்களில்
பூக்களுடன் உரையாடுங்கள்

ஒரு நிலவு தழுவ வராத இரவில்
நட்சத்திரங்களை
முத்தமிடுங்கள்

ஒரு பயணம் சலிப்பூட்டும் வேளையில்
குளிர் நிழலின் ஆதுரத்தில்
இளைப்பாறுங்கள்

ஒரு உறவில்
மனம் பொருந்தாத போது
புன்னகைத்து விலகி விடுங்கள்

**செ.வீரமணி**



## இரவும் கருப்பும் ஒன்றல்ல

கேள்வி கேட்டு காயப்படுத்த எத்தனிக்காத
இதயம் துயர் தீர்க்க வழியின்றி
இருளாவது கவிழத்
தன்னந் தனியே காத்துக் கிடக்கிறது

இரவைக் கருமை என்றவர்கள்
அதன் அழகறியாதவர்கள்
உண்மை எதுவென்று அறியாமல்
எளிதில் பழி சொல்லும் நிஜமறுப்பவர்கள்

காத்து கருப்பு அண்டாமல்
காக்கச் சொன்னவரும்
இரவை ஒதுக்கியதான சரித்திரம்
ஒருபோதும் இங்கிருந்ததில்லை

பல்லக்கில் பவனி வந்த காலத்திலும்
சுமந்து வந்தோர் நசுக்கப்பட்டோரென
பகட்டார் அறியாத போதும்
ஒதுக்காத ஒரு நிறம் இரவினுடையது

பசித்தோர் பட்டென கடக்க விரும்பினாலும்
சட்டென ஒரு நொடி தூங்கி விழிக்க
நாடியதென்னவோ
இரவென்ற தோழனைத்தான்

ஒற்றர்கள் விரும்பிய நேரம் கூட
பகல் இல்லை என்பது வெட்ட வெளிச்சம்
அதைப் புரியாதோர் புகலிடம் தேடும்
அவ்விடம் சந்தேகமின்றி
நிச்சயம் இருளானதுதானே

மன்னருக்கு எப்போதும் தன் மணிமுடி மீதே
கண் மயிர் போவதும் மக்கள் உயிர்
துறப்பதும் ஒன்றாகிப் போனதும்
உடன் உண்டாகுமே ஒன்று

அது ஒளியென்ற ஒன்றைக் காணாத
இருளெனவே கொள்க
அப்போது நாம் ரசித்த இரவும்
முற்றியக் கருப்பாகப் போகும்
வெறுத்தொதுக்கும் வெற்று
முரண் முரசாகவும் ஆகும்

நடராஜன் பெருமாள்



## கோலிக் குண்டு ஊர்வலம்

கால் பரீட்சை அரைப்பரீட்சை
முழுப்பரீட்சை விடுமுறைகள்
மொத்தமாய் கோலி ஆடியே
டவுசர் பையின் ஒட்டையில்
தண்ணீர் சேர்வது போல
பரீட்சை விடுமுறையும்.

செல்லியாரம்மா கோவில் சுவர்
பிள்ளையார் கோவில் சுவர்
கோலியாடவே மைதானங்கள்
பூத்திருக்கும்.

குழி வைத்து ஆடும் ஆட்டமும்
கட்டம் போட்டு சிறு கோலிகளை
பெரிய கோலிகள் குறி வைத்து
ஆடும் ஆட்டமும் மளிகைக் கடைக்கு
வசூலை ஈட்டும்.

நிலத்தில் குறி வைத்து அடித்து
குழியில் விழச் செய்து
குண்டுகளை சேகரிக்க சேகரிக்க
ஒட்டைப் பை நிரம்பும்.

பணக்காரர்களின் ஆட்டமாய்
காலத்தின் முகவரி
பில்லியர்ட்ஸ் என எழுதியது.

ஆள்காட்டி விரலால் பெரிய கோலி
சிறு கோலிகளை வேகமெடுத்து
வீழ்த்தும் திசைகளில் டவுசர் பை நிரம்பும்.

ஆடையில்லா வெயிலைப் போல
ஆடையில்லா மேனியோடு
கோலி வைத்து ஆடும் ஆட்டம்
வெயிலை விட அனல் பறக்கும்
வேப்பமரங்கள் வேடிக்கை பார்க்கும்.

விடுமுறைகள் முடிய
கோலிக் குண்டுகளும் காணாமல் போகும்
மஞ்சள் பழங்களை
வேப்ப மரமும் ஈன்றெடுக்கும்.

விடுமுறைகள் கிராமத்தை
கொண்டாடிய காலங்களை
“ZOOM” கொஞ்சம் கொஞ்சமாக
குழந்தைகளை கிழித்துப் பார்க்கிறது.

வீரசோழன்.க.சோ. திருமாவளவன்



ஊமையைப் போல் பேசுகிறாய்
செவிடைப் போல் கேட்கிறேன்
திண்டாடுகிறது காதல்
~

என் உறக்கத்தில்
விழித்தே இருக்கிறது
உன் நினைவுகள்
~

பேசாமல் பேசுகிறாய்
நீண்டு கிடக்கிறது மௌனம்
வேடிக்கை பார்க்கிறது காதல்
~

துயரத்திலிருந்து வெளிவர
காதலால்
சிறையிட்டுக் கொண்டேன்.
~

உன் சொற்கள்
வைரத்தை போன்றவை
என் கண்ணீர் துளிகள்
எவ்வளவு பிரகாசிக்கிறன.
~

விழி மூடுகிறேன்
இரவுக்கான சூரியோதயமாய்
நீயே வருகிறாய்
~

இரவை நட்சத்திரங்கள்
அலங்கரிக்கின்றன
காதலை காயங்கள்
அலங்கரிக்கின்றன
நட்சத்திரமற்ற இரவு ஏது?
~

கதவை தட்டப்போவதில்லை
திறப்பாய் என்ற நம்பிக்கை
போகாதிருக்கட்டும்
~

கொடுத்ததை
திரும்ப பெறும்
பழக்கமில்லை
ஒரு "ம்" போதும்
மீதத்தை
நீயே வைத்துக்கொள்.

கோ.லீலா



ஆசிர்வாதமெனத்
தலையில் தும்பிக்கை பட்டதும்
தன்னுடைய காட்டுக்குள்
இழுத்துக்கொண்டுபோய்
நிறுத்திவிட்டான்
அந்தக் கோயில் யானையை
பார்வையற்றவன்

**கார்த்திக் செல்வராஜ்**

பனி விழும் இரவு
தாலாட்டும் காற்று
இலை மீது நிலவு..!

**சு.கேசவன்**

தாமதமாகும் ஊதியத்தால் சட்டைபையின்
வெற்றிடத்தை நிரப்ப
தனிமையின் வெறுமையில் சிந்திடும்
ஒரு துளி கண்ணீர் போதுமானதாகிறது.!

கையறுபட்ட நிலையிலும்
யாரிடமும் கையேந்தாமல்
காக்கும் தன்மானத்திலும்
தாயமாடி மகிழ்கிறது எதற்கும்
உதவாமல் போன நேர்மையும்
வைராக்கியமும்.!

உறங்கி எழுவோமென்ற
நம்பிக்கையில் உறக்கமில்லா
இரவில் தேடுகிறேன்
நாளைய விடியலின் எதிர்பார்ப்பில்
ஊதியத்தின் வரவு.!

**த. ரவீந்திரன்**



நமக்கான நேரம் வருவதற்கு முன்
எத்தனை முறை
அவசரப்பட்டாயிற்று

நம் பக்கமும் காற்று வீசுவதற்கு முன்
எத்தனை முறை காற்றைத் தேடி
களைத்து வீழ்ந்தாயிற்று

எத்தனை முறை
அழுது தீர்த்தாயிற்று

எத்தனை நாட்கள்
வாழ்வை வெறுத்தாயிற்று

யார் யாரையோ பார்த்து
இவர்களைப் போல்
என் வாழ்வில்லையே என
எத்தனை முறை
அங்கலாய்த்து விட்டாயிற்று

அவர்களுக்கு கொடுத்தது போல்
இறைவன் எனக்கு தரவில்லையேயென
எத்தனை முறை கவலைப்பட்டாயிற்று

எத்தனை முறை
வாழ்வு என்னை
அலைக்கழித்து விட்டதென
விதியை நொந்தாயிற்று

இத்தனை தடவைகள் முயற்சித்தும்
என்னால் எள்ளளவும்
மாற முடியவில்லையேயென
எத்தனை முறை முயற்சிகளை
இடையிலே போட்டுவிட்டு நகர்ந்தாயிற்று

நிஜமாகவே நமக்கானதொரு
காலம்
நேரம்
தவணை
தலை எழுத்து
வரும் வரையில்
எத்தனை முறை தான்
நம்மை நாமே வருத்திக் கொண்டாலும்
சோகம் கவ்விய முகத்துடன்
கவலை தோய்ந்த மனதுடன்
அலைக்கழிந்தாலும்
அழுது புலம்பினாலும்

நமக்கானது நமக்கே உரிய நேரத்தில்
நிச்சயம் வந்தடையும்
அதுவரை
காத்திருத்தலுக்குப் பெயர் தான்
பொறுமை எனப்படுவது!

ஷப்ரா இல்முத்தீன்



தூரம் அதிகமில்லை
அது காடாகவும் இருக்கலாம்..
மணல்வெளிப் பிரதேசமாகவும்
மலைகள் நிறைந்த பகுதியாகவும்
இருக்கலாம்...
நாம் கைகோர்த்தபின் மனதில்
அச்சம் சிறகுமுளைத்துப் பறந்தது!
கால இடைவெளிகளை இட்டு நிரப்பும்
பஞ்சாங்கத்தின் பக்கங்கள்
இனி நம்மிடம் இல்லை!
ஏகாந்தமாய் வானமும் பூமியும்
நம்மை வரவேற்கிறது...
மண்வாசம் முடைநாற்றம்
வீசியபின்னும் மானுடப் பிறவிகளின்
எல்லைகளுக்குள் நமக்கென்ன வேலை!
இயற்கை இயற்கையாய் உடனிருக்க
இவர்கள் விரும்புகிறார்கள்...
சிறுமிகள் மட்டுமே விளையாடும்
அந்த இன்ப உலகைக் காண
நமது நடைபயணம் தொடரட்டும்...
தூரம் அதிகமில்லை...
தொல்லைகளும் அங்கில்லை!

கா.ந.கல்யாணசுந்தரம்

## இன்னும் என்ன வேண்டுமென இறையருளை வியக்கிறேன்..!

குருவியைப் போல்
மனச் சிறகால்
அந்த வானம் அளக்கிறேன்...

கொடியில்லா பூங்காவில்
மென் மலராய் சிரிக்கிறேன்...

குறைவில்லா ஆசைகளால்
நெஞ்சில் உன்னை சுமக்கிறேன்...

நிறைவில்லா வாழ்க்கையிலும்
நிறைகுடமாய் மகிழ்கிறேன்...

பழுதில்லா வாக்கினால்
சுகந்தமாய் மணக்கிறேன்...

இரவில்லா பகலொன்றில்
நிலவுடனே கதைக்கிறேன்..

இன்னும் என்ன வேண்டுமென
இறையருளை வியக்கிறேன்...

ஜெகன் மோகன்



விட்டிலின் பார்வைக்கு
எளிதில் கிட்டி விடுகிறது
விளக்கின் ஒளி

பருந்தின்
பார்வைத் திறனினை
அதன் சிறகுகளே
தீர்மானிக்கிறது.

சுரேஷ்பாபு ராசேந்திரன்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி
சாலையெங்கும் கிடக்கிறது
பிஸ்கெட் பாக்கெட் வாட்டர் கேன்.

சிவசந்திரன்

## துளிப்பா

அம்மன்கள் ஆயிரம்
ஆயுதங்கள் ஏராளம்
பாலியல் வன்மமோ தாராளம்
~
ஆடிதோறும் வெள்ளி
வெள்ளிதோறும் பொங்கல்
விடியல் காணா பெண்கள்
~
பொங்கலிட்டுப் படையல்
ஆடுகோழி பலியிடல்
கூடவே சிறுமி பெண்கள் நலன்கள்

பெரணமல்லூர் சேகரன்



## நினைவுகள்

முன்னோக்கி போகும் பயணம்
பின்னோக்கி போகும் மரங்கள்
தலை கோதும் இளங்காற்று
என்னுள் மீட்டும் சில நினைவு

உறங்கா இரவுகள்
நகரா நிமிடங்கள்
தீண்டிய பொழுதுகள்
தூண்டிய உணர்வுகள்
சிலிர்ப்பும் சிரிப்புமாய் சம்பாஷனைகள்
சிறகை விரித்தது சில ஆசைகள்

மௌனம் செய்த ஆதிக்கங்கள்
மகிழ்வில் ஆழ்த்திய தருணங்கள்...
நீ இல்லா இப்பொழுதையும்
இனிதாக்குகிறதே
இனியனே!!

**கயல்**

மாற்றம் மானுடத் தத்துவம்
முரணாய்
இயல்பென்பது இடுகாடுவரை
பின் மாறப்போவதெது?
மனம் மனம் மனம் மட்டுமே
ஒவ்வொரு கிளையாய்
ஒவ்வொரு மரமாய்
அமைதியுறாமல்
அலைந்தலைந்து செல்லும்
நீண்ட வாழ்வை
வேறெப்படி கடப்பது
நிகழ்கிற வரை மருகும்
நிறைகிற நொடி விலகும்
வலிந்திழுத்திட வலுக்கும்
அறிந்திடா நொடி விலக்கும்
நிறை நிறையென அரற்றும்
வரைமுறையின்றி பிதற்றும்
மாற்றம் நிற்கும் நொடி
நாடி நின்றிருக்கும்.

**காயத்ரி ராஜசேகர்**



கொட்டும் அருவியாய்
ஆர்ப்பரித்து ஓடிய நாள்கள்

சுனைநீராய் சலசலவென
மென்மைத் தொடுதலோடு
நீண்டுசென்ற நாள்கள்

இருகரையும் தொட்டு
மகிழ்வில் குதித்தோடும் நதியாய்
பொங்கி வழிந்த நாள்கள்

கரை தொட்டும் உள்வாங்கியும்
நுரையோடு நடனமாடும் கடலென
அன்பின் பரிமாற்றங்களால்
நெகிழ்ந்த நாள்கள்

எல்லாமும் இன்று
நினைவுகளாய்ப் புதைந்துபோக
சுட்டெரிக்கிறது
காய்ந்து கிடக்கும்
மணல்.

**குளோரிசக்தி**

நான் கொண்டாடி மகிழ்ந்த
கவிதையின் சொந்தக்காரன்
இப்போது என்ன செய்கிறான்
காற்றையும் ஆகாயத்தையும்
காலை உணவாக
கவிதைக்கு கொடுத்துவிட்டு
உனக்கு சூரியனை விழுங்கத் தருகிறேன்
என மகளிடம்
சொல்லிக் கொண்டிருக்கிறான்
சூரியன் வேண்டாம்
நிலா போதும் என்கிறாள்
தந்தையின்
வறுமையை அறிந்த மகள்!!!

**கி.கவியரசன்**



மழை வடிந்த அதிகாலையில்
காற்றில் பறந்து வரும்
சிட்டுக்குருவியின் பாடல்
ஞாபகக்குளத்தில் அலையடிக்கும்

குளிர்கால இளவரசி
கதை ஒன்றில்
ஒழிந்து இருக்கும்
ஆச்சரியம் இன்னும் விளங்கவில்லை

பேருந்து பயணத்தில்
யாரோ ஒருவர்
யாருடனோ நடத்தும்
கருத்து முரண் ஏன் என்னை
பாதிக்கவில்லை

மின்னலின் சாயலில்
ஓடும் வாகன நெரிசலில்
மிதக்கும் தட்டானின்
சுகம் எப்பொழுது வாய்க்கும்

சாலையோர நாணலில்
சூரிய கதிர் வரைந்த ஓவியம்
பிரபஞ்ச ரகசியத்தை
மொழிபெயர்த்தபடி

இன்னும் இன்னும்
ஆயிரம் சுவாரஸ்யமான
தகவல்களை அள்ளி வரும்
அதிகாலை...

யாழ் எஸ் ராகவன்



நீலவான கடற்கரையில்
நட்சத்திர கிளிஞ்சல்களை
சேகரித்து மடியில் நிரப்பிக்
கொண்டிருந்தது நிலவு..

துடுப்பு இல்லாத
கட்டுமரங்களைப் போல்
மிதந்து கொண்டிருந்தன
மேகங்கள்...

மெல்லிய இரவின் இருள்
முந்தானையால் முகம் மறைத்து
நடந்து வந்து கொண்டிருந்தது
அந்திப் பொழுது...

ரிஸ்வான்

உற்சாகம் மிகுந்த
நொடிகளுக்காக ஏங்குகிறேன்.

கவலைகள் படிந்த
இந்த முகத்தைப் பிடிக்கவில்லை.

கம்பீரமான வார்த்தைகள்
ஒதுங்கி நிற்கிறது.

ஒரு காலத்தில்
சிரித்துக் கொண்டிருந்ததாக ஞாபகம்.

கொடுத்துக் கொண்டிருந்த கைகள்
ஏந்திக் கொண்டிருக்கும் ஓவியத்தை
வரைகிறேன் இப்போது.

உற்சாகம் இழந்து
கவலைகள் படிந்த முகத்துடன்
அலையும் என் கண்களில் படிகிறது
ஒரு பிச்சைக்காரனின் வலி.

ஆத்மாஜீவ்




## புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**இலக்கிய படைப்பு குழுமம்**

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,

கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788

padaippu admin@padaippu.com www.padaippu.com